2nd November 1962]

'பாப்லோ' படகுகள் (செங்கல்பட்டு மாவட்டம்)

* 1148 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் எத்தனை 'பாப்லோ' படகுகள் எந்த அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ளன?

கனம் திரு. ந. நல்ல சேனபதி சர்க்கரை மன்றாடியார் : மீனவர்களுக்கும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், முப்பது அடி நீளப்படகுகளும் இருபத்தைந்து அடி நீளப்படகுகளும் தவணைக் கொள்முதல் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன. அதற்கு முன்னதாக முப்பது அடி நீளப் படகுக்கு, ரூபாய் 5,000-மும், இருபத்தைந்து அடி நீளப் படகுக்கு ரூபாய் 4,000 பிணைவைப்புத் தொகையாகக் கட்டவேண்டும். 1961-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் விண்ணப்பதாரர்கள் யாரும் இந்த வைப்புத் தொகை கட்ட முன் வராததால் 'பாப்லோ' படகு எதுவும் வழங்கப்படவில்லை.

Industries (Quality Control)

*** 1149** *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to introduce statistical quality control units for industries in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. A proposal to introduce statistical quality control for ceramics, steel furniture and cycle assembly to start with, under Small Scale Industries is under the consideration of the Director of Industries and Commerce. The details of the scheme have not yet been submitted to Government.

திரு. வை. சங்கரன் : இதுபோன்ற இதர தொழில்களுக்கும் இதை விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : "ஸ்டாடிஸ்டிக்கல் க்வாலிட்டி கண்ட்ரோல்" என்பதை ஒன்றிரண்டு தொழில்களுக்கு உபயோகிப்பதற்கு முன்வந்திருக்கிறோம். பரீட்சை வெற்றிகரமாக இருந்தால் அதைப்பற்றி யோசனை செய்வார்கள்.

ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதி

* 1150 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுக்கா தலைஞாயிறு கிராமத்தில் ஹரிஜனங்கள் வீடுகள் அமைக்க வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க இயலவில்லை என்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துள்ளார்களா?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The matter is under consideration of the Government.